**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.61 of 2023**
**Prosecution Witness**:PW3

| | | | |
|---|---|---|---|
| Name | தியாகு(PW3) | | |
| Father's Name | பொன்னுசாமி | | |
| Village | கோத்தகிரி | | |
| Taluk | | | |
| District | நீலகிரி மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05th day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் காலமான தினேஷ்குமார் என் மச்சினன். கடந்த 06.01.2023 ம் தேதி நான் கோத்தகிரியில் இருந்த போது என் மாமனார் எனக்கு போன் செய்து நானும் தினேஷும் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது லாரி மோதி விபத்து ஏற்பட்டது. அதில் தினேஷுக்கு காயம் ஏற்பட்டு அவிநாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைகள் சேர்த்து இருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் அன்றைய இரவே அவிநாசி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். அங்கு தினேஷ்குமார் உடல் அவிநாசி அரசு மருத்துவமனையின் சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. என் மாமனார் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் என் மச்சினனின் உடலை பிரேத விசாரணை செய்தார்கள் நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது. இறந்து போன தினேஷ்குமார் என் உறவினர் என்பதால் என் மாமனார் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |